**வரையறுத்த மில்கோ (தனியார்) கம்பனியின் 2020, 2021 மற்றும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடங்களுக்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுத்த மில்கோ (தனியார்) கம்பனியின் 2020, 2021 மற்றும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களிதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் ச்ட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் உரிய காலத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தமது வருமானங்கள் செலவுகள், தொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறைப்படியாக ஏடுகளையும் அறிக்கைகளையும் பேணுதல் அவசியமானதாகும்.

அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சட்டத்தின் மூலம் காட்டக்கூடிய வகையிலான காலப்பகுதிக்குள் அந்த கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1) (ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவைப்படும் வேளைக்குள் தயாரிக்கப்படுகின்றது என சான்றுபடுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான பொறுப்பினை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டக் கையேட்டின் 6.6 ஆம் இலக்க பந்திக்கு இணங்க 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் | • 2020 - வரைபு கணக்கறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.<br>• 2021 மற்றும் 2022 - கணனி தவறுகளின் அடிப்படையில் வரைபு கணக்கறிக்கையினைத் தயாரித்தலில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் அக்கணனி தரவுகளை நாளதுவரையாக்குதல் தற்பொழுது இடம்பெற்றுவருகின்றது. | தாமதமின்றி 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களையும் வரைபு ஆண்டறிக்கைகளையும் தயாரித்து கணக்காய்வசாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் 2023 மார்ச் 24 ஆந் தகிதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத:துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ/03/2020 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | அரசாங்கத்திற்கு முழுமையாகச் சொந்தமான கம்பனிகளால் 2020 ஆம் ஆண்டிற்கான மிகையூதியத்தினை செலுத்தும் போது 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 30 மாத காலம் தாமதித்து 2022 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அக்கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு முன்னர் சுற்றறிக்கைக்கு முரணாக நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரம் அல்லாத 1350 உத்தியோகத்தர்களுக்கு ஒரு உத்தியோகத்தருக்கு ரூ 15,000 வீதம் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 19,086,375 தொகை மிகையூதியமாக செலுத்தப்பட்டிருந்தது. | மில்கோ நிறுவனத்தில் மிகையூதியத்தினை செலுத்தும் போது அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை பின்பற்றப்படாததுடன் பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க கொடுப்பனவு செய்யப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகளால் 2020 ஆம் ஆண்டிற்கான மிகையூதியங்களைச் செலுத்தும் போது 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 15 ஆந் திகதிய பீஈடீ 03/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான மிகையூதியம் செலுத்தப்பட வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கம்பனியால் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் | மில்கோ நிறுவனத்தில் மிகையூதியத்தினை செலுத்தும் போது அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை பின்பற்றபடாததுடன் பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க கொடுப்பனவு | சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் 2021 ஆம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 30 மாதங்கள் தாமதித்து 2023 ஆகஸ்ட் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு முன்னர் சுற்றறிக்கைக்கு முரணாக 2021 ஆம் ஆண்டிற்கு 1356 ஊழியர்களுக்கு 2021 ஏப்ரல் 09 ஆந் திகதி ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 20,000 வீதம் ரூபா 25,921,238 தொகையும் 2021 திசெம்பர் 21 ஆந் திகதி ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 11,657 வீதம் ரூபா 14,800,907 தொகை மிகையூதியமாக செலுத்தப்பட்டிருந்தது. | செய்யப்பட்டது. | ஆண்டிற்கான மிகையூதியம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய பீஈடீ 09/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | 2022 ஆம் ஆண்டிற்கான மிகையூதியத்தினை செலுத்தும் போது 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் 2021 ஆம் ஆண்டில் நட்டமாகவிருந்ததால் மிகையூதியத்திற்கு தகமை இல்லை என காட்டப்பட்டிருந்தது. கம்பனியால் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 மார்ச் 24 ஆந் தகிதி வரையும் சமர்ப்பிக்காதிருந்தும் மற்றும் நிறுவனத்தின் இலாப நிலைமை தொடர்பான தகவல்கள் இல்லாதிருந்தும் மீகையூதியம் பெறுவதற்கு தகமை இல்லாத நிலையிலும் 2022 ஏப்ரல் 11 ஆந் திகதி மற்றும் 2022 திசெம்பர் 23 ஆந் திகதி அச்சுற்றறிக்கைக்கு முரணாக ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 10,000 வீதம் முறையே ரூபா 13,044,888 மற்றும் ரூபா 12,719,687 தொகைகள் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத ஊழியர்களுக்கான மிகையூதியமாக செலுத்தப்பட்டிருந்தது. | மில்கோ நிறுவனத்தின் மிகையூதியத்தினை செலுத்தும் போது அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையினை பின்பற்றி மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு இணங்க கொடுப்பனவு செய்யப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான மிகையூதியத்தினை கொடுப்பனவு செய்யும் போது 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளை உள்ளடக்கும் வகையில் கூட்டிணைந்த திட்டம் அல்லது தந்திரோபாய திட்டமானது கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 28 | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது நாட்டில் பரவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் ஏனைய குழப்பமான | சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளை உள்ளடக்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு, 01/2014 ஆம் இலக்க 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான நல்லாட்சிக்கான வழிகாட்டியின் 2.3 ஆம் பிரிவு | ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமைகளின் காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான ஒரு தொழில்முயற்சி திட்டத்தினை தயாரிப்பதற்கான இயலுமை இருக்கவில்லை. எனினும் ஒவ்வொரு ஆண்டிற்குமான செயல் நடவடித்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | வகையில் கூட்டிணைந்த திட்டம் அல்லது தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பந்தி | கம்பனியால் பிரதான பெறுகைத் திட்டம் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளை அதில் பட்டியல்படுத்தப்பட வேண்டியதுடன் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் நாளாந்தம் நாளதுவரையாக்குதல் வேண்டும். எவ்வாறாயினும் அவ்வாறான விடயங்களை உள்ளடக்கிய ஒரு பெறுகைத் திட்டம் 2020, 2021 மற்றும் 2022 ஆகிய மூன்று ஆண்டுகளுக்காகவும் தயாரிக்கப்படவில்லை. | தற்பொழுது இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் புதிய இயந்திரங்களைப் பொருத்தியதன் பின்னர் 2017 ஆம் ஆண்டின் யூலை மாதத்தின் போது தயாரிக்கப்பட்ட 771,652 கிலோகிராம் பால்மா குறைபாடுகள் அற்றது என பரீட்சிப்பு அறிக்கை வழங்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டதுடன் பாவனையாளர்களின் முறைபாட்டின் காரணமாக மனிதப் பாவனைக்கு பொருத்தமற்றது என்பதனால் மீண்டும் களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | மனிதப்பாவனைக்கு பொருத்தமற்ற மிகுதியான பால்மா இருப்பினையும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த இருப்பினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

ரூபா 475.2 மில்லியன் பெறுமதியான 720,000 கிலோகிராம் பால்மா 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை கால்நடை உணவாக விற்பனை செய்ததன் பின்னர் எஞ்சியுள்ள 561,264 கிலோகிராம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அம்பேவெல தொழிற்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டது. மனிதப் பாவனைக்கு பொருத்தமற்ற பால்மாவினை தயாரிப்பதற்கு பொறுப்புக்கூறக்கூடிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக எதுவித விசாரணையும் நடாத்தப்படவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் ஒட்டுமொத்த உற்பத்தியில் கம்பனியின் ஊழியர்களுக்கு இலவசமாக வழங்கிய பால்மா, படர், சீஸ், வெண்ணை மற்றும் ஏனைய பால் மா சார்ந்த தயாரிப்புக்கள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளதுடன் இவற்றிற்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அளவானது ஆண்/ பெண் ஊழியர்களுக்காக பரிசுப் பொதிகளை வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ளதுடன் பதவியணியினர்களுக்கு ஆண்டின் ஏப்ரல், திசெம்பர் ஆகிய மாதங்களில் பரிசுப் பொதிகளை வழங்குதல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. | சட்டரீதியற்ற கொடுக்கல் வாங்கல்களாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | உற்பத்தி வகை | 2022 | | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஒட்டுமொத்த உற்பத்தி | இலவசமாக வழங்கப்பட்ட அளவு | ஒட்டுமொத்த உற்பத்தி | இலவசமாக வழங்கப்பட்ட அளவு | ஒட்டுமொத்த உற்பத்தி | இலவசமாக வழங்கப்பட்ட அளவு |
| 1. | பால்மா (கிலோகிராம்) | 2,060,294 | 38,992 | 2,806,395 | 42,172.8 | 4,264,012 | 25,849 |
| 2. | படர் (கிலோகிராம்) | 360,889 | 1,800.35 | 578,372 | 1,525.5 | 726,389 | 892.78 |
| 3. | உலர்த்திய பால் (லீற்றர்) | 739,092 | 3,122.61 | 929,671 | 3,417.21 | 873,749 | 2,155.58 |
| 4. | சீஸ் (கிலோகிராம்) | 30,666 | 480.51 | 21,666 | 491.8 | 34,151 | 0.8 |
| 5. | திரவப் பால் (லீற்றர்) | 10,331,807 | 11,926.59 | 16,324,547 | 9,011.5 | 14,248,148 | 3,421 |
| 6. | வெண்ணை (லீற்றர்) | 67,342 | 697.65 | 92,802 | 555.65 | 85,258 | 309.35 |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மில்கோ நிறுவனத்தின் அம்பேவல தொழிற்சாலைக்கு 2015 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆகஸ்ட் 31 வரை டீசல் இருப்பினை கொள்வனவு செய்வது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது பொற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 17,209,467 பெறுமதியான 165,300 லீற்றர் டீசல் மில்கோ நிறுவனத்தின் தொழிற்சாலையின் எண்ணை தாங்கியில் இறக்கும் நடவடிக்கை இடம்பெறவில்லை என அவதானிக்கப்பட்டது. | டீசல் இருப்பின் ஒழுங்கீனம் சம்பந்தமாக உள்ளக கணக்காய்வு பிரிவினால் முழுமையான | எரிபொருள் ஒழுங்கீனம் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களுக்கும் எதிராக |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டதுடன் அந்த அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட வியடங்களுக்கு இணங்க பொறுப்புக்கூற வேண்டும் என கருதப்படுகின்ற உத்தியோகத்தர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்திவைப்பதற்கு உட்படுத்தப்பட்டு மேலதிக ஒழுக்காற்று விசாரணை இடம்பெற்றுவருகின்றது. | ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இவ்வாறான மோசடிகளைத் தவிர்ப்பதற்காக வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆகஸ்ட் 31 வரை தொழிற்சாலைக்கு எரிபொருள் இருப்பு கிடைக்கும் பாதுகாப்பு பிரிவின் பதிவேட்டினை பரீட்சித்த போது ரூபா 9,364,835 பெறுமதியான 92,400 லீற்றர் டீசல் அளவினை கொண்டு வந்த 14 பவுசர்கள் தொழிற்சாலைக்கு வருகை தந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. இதன் போது சில இருப்புக்கள் சம்பந்தமாக இன்வொயிஸ்களில் காட்டப்படுகின்ற கையொப்பங்கள் பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தர்களின் கையொப்பங்களுடன் ஒப்பீடு செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | டீசல் இருப்பு ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் முழுமையான கணக்காய்வு பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அந்த அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு இணங்க பொறுப்புக் கூற வேண்டும் என கருதப்படுகின்ற உத்தியோகத்தர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு மேலதிக ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. அவ்வாறே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. | எரிபொருள் ஒழுங்கீனத்தோடு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மில்கோ நிறுவனத்தின் அம்பேவெல பால் தொழிற்சாலையின் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆகஸ்ட் 31 வரை தொழற்சாலையில் உள்ள மின்பிறப்பாக்கி இயந்திரங்களுக்கு தாங்கிகளிலிருந்து டீசல்களை வழங்குவது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது மின்பிறப்பாக்கி இயந்திரங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என இருப்பேடுகளில் குறிப்பிட்ட அளவும் பொறியியல் பிரிவினால் பேணப்படுகின்ற ஏடுகளிலுள்ள அளவுகளுக்குமிடையே 58,703 லீற்றர் லீசல் காணாமல் போயிருந்தன. | டீசல் இருப்பு ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் முழுமையான னகணக்காய்வு பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அந்த அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு இணங்க பொறுப்புக் கூற வேண்டும் என கருதப்படுகின்ற உத்தியோகத்தர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு | எரிபொருள் ஒழுங்கீனத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இவ்வாறான மோசடிகளை வெளிப்படுத்தும் வகையில் வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப் படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | | மேலதிக ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. அவ்வாறே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. | வேண்டும். |
| (உ) | அம்பேவெல பால் தொழிற்சாலையின் எரிபொருட்களை கொள்வனவு செய்யும் போதும் வழங்கும் போதும் இடம்பெற்றுள்ள மோசடிகளுக்கு இணங்க அந்த நடைமுறையின் உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் பலவீனமான மட்டத்தில் உள்ளது என அவதானிக்கப்பட்டதுடன் இவ்வாறான மோசடிகளைத் தவிர்ப்பதற்காக வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபித்தல் உயர் முகாமைத்துவவத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் இருப்பினை பேணுவது சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்நடைமுறைகளை மீற சில உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் இந்த மோசடிகளுக்கு காரணமாக உள்ளது. எனவே மேற்கூறிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதனை தொடர்ச்சியாக கண்காணிப்புச் செய்வதற்கான வேலைத்திட்டம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | எரிபொருட்களை கொள்வனவு செய்யும் போதும் வழங்கும் போதும் வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை ஸ்தாபித்தல் வேண்டும். |
| (ஊ) | நிறுவனத்திற்கு விவசாயிகள் பாலினை வழங்குவதனை ஊக்குவிக்கும் குறிக்கோளில் 2021 சனவரி 08 ஆந் திகதி எடுக்கப்பட்ட பணிப்பானர் தீர்மானத்திற்கு இணங்க அதிகஅளவில் பாலினை வழங்கும் விவசாயிகளுக்கு தற்பொழுது வழங்கப்படுகின்ற ஊக்குவிப்பினை ஒரு ரூபாவினால் அதிகரித்து 2021 சனவரி மாதத்திலிருந்து கொடுப்பனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஊக்குவிப்பு படியினைச் செலுத்துவதற்கு முன்னர் 2020 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் பாலைச் சேகரிக்கும் முழு அளவு 2,610,040 லீற்றர்களாக இருந்ததுடன் முறையே 2021 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டின் போது சேகரிக்கப்பட்ட பாலின் அளவு 1,755,447 மற்றும் 2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டின் போது சேகரிக்கப்பட்ட பாலின் அளவு 1,789,234 லீற்றர்களாகும். அதற்கிணங்க ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டதன் பின்னரும் பால் வழங்குதல் அதிகரிப்பு அவதானிக்கப்படாததனால் செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு படியானது சிக்கனமற்ற ஒரு செலவாக மாறியிருந்தது. | களத்தில் காணப்படுகின்ற தீவிர போட்டியின் கீழ் ஏனைய நிறுவனங்கள் விலையை அதிகரித்துள்ளதுடன் அந்த போட்டிக்கு முகங்கொடுப்பதற்காக எங்கள் கம்பனியும் இந்த விலை அதிகரிப்பினை மேற்கொண்டது. அவ்வாறு சில அளவிலேனும் விலையை அதிகரிக்கவில்லையாயின் அப்போதைக்கு மில்கோ நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பாலின் அளவும் வேகமாக குறைந்திருக்கும் ஆபத்து காணப்பட்டது. | பால் வழங்குனர்களுக்கும் செலுத்தப்பட்ட ஊக்குவிப்புப் படி தொடர்பாக மீளாய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்களாக ரூபா 6,065,801,089 பெறுமதி காட்டப்பட்டிருந்தும் நிலையான சொத்துக்கள் சம்பந்தமான பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்காததனாலும் முறையாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு கம்பனியால் பேணப்பட்டிருக்காததனாலும் நிலையான சொத்துக்களின் கிரயம் உள்ளமை, பெறுமானத் தேயிவினைக் கணித்தல், நீக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் முதலியவற்றின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிறுவனத்தின் நிவையான சொத்தக்கள் பட்டியல் Excel பத்திரத்தில் பேணப்படுவதுடன் அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக் கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு கம்பனியால் பேணப்படுதல் வேண்டும். |
| (ஏ) | அம்பேவெல தொழிற்சாலையில் 2017 யூன் மாதத்தின் போது ஸ்தாபிக்கப்பட்ட புதிய இயந்திரத்தினை செயற்படுத்துவதற்கு தேசிய மின்வலு இணைப்பில் அடிக்கடி ஏற்படும் மின்சார துண்டிப்பின் காரணமாக தடைப்பட்ட வருகையினால் புனரமைக்கப்பட்ட மின்சார முறைமையை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதன் காரணமாக இவ்வாறான மின்துண்டிப்புக்களின் போது இயந்திரங்களின் செயலாற்றலுக்கு பாதிப்பு ஏற்படாதிருப்பதற்காக தொடர்ச்சியாக மின்வலுவினை வழங்கும் அலகினை வழங்கி பொருத்துவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களுக்கு கேள்விகளை வழங்கியததன் பின்னர் புதிய பணிப்பாளர் சபையின் வருகைக்குப் பின்னர் அது இரத்துச் செய்யப்பட்டதனால் அக்கம்பனியால் மில்கோ கம்பனிக்கு எதிராக ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இதற்காக நிச்சயமற்ற செலவு ஏற்படலாம் என்பதனைப் போல அந்த மின் வழங்கல் அலகினை கொள்வனவு செய்யாமையால் எதிர்பார்த்தவாறு உற்பத்திச்சாலை நடவடிக்கைகளுக்காக அந்த புதிய மின்சார முறைமையை (MV பெனல்) பயன்படுத்து வதற்கு முடியாமையின் காரணமாக மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்காக அதிக செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | கம்பனிக்கு பக்கசார்பு இல்லாத வகையில் மேற்கூறிய வழக்கினை சமாதானப்படுத்துவதற்கும் UPS முறைமையினை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தொடர்ச்சியாக மின்வலுவினை வழங்கும் ஒரு அலகினை துரிதமாக ஸ்தாபித்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயல் முன்னேற்றத்தினை பரீட்சசித்த போது பால்சார்ந்த உற்பத்திகள் மற்றும் பால் பெறுகை பிரிவின் 03 செயற்பாடுகள் சம்பந்தமாக எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்துகொள்ளல் பூச்சிய மட்டத்தில் காணப்பட்டதுடன் இன்னும் 13 செயற்பாடுகள் சம்பந்தமான இலக்குகளை அடைந்துகொள்ளல் 2 சதவீதத்திலிருந்து 69 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக இலக்கிடப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையான பால் சார்ந்த உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாலை கொள்வனவு செய்தல் ஆகிய துறையின் குறுங்கால கறிக்கோள்களின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது வருடாந்த பால் சேகரிப்பினை 96 மில்லியன் லீறற்ர் வரை அதிகரிக்கச் செய்தல், பால்சார்ந்த உற்பத்திகளுடன் தொடர்புபட்ட விவசாயிகளின் வருடாந்த சராசரி வருமானத்தினை 12 சதவீதத்தினால் அதிகரிக்கும் குறிக்கோளுடன் பால் சேகரிக்கும் வலையமைப்பினை வியாபிக்கச் செய்வதற்காக ஆண்டின் போது 13 நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் 34 துணை நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அச்செயற்பாடுகளுக்காக ரூபா | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக இலக்கிடப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | பால்சார்ந்த உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பால் கொள்வனவு இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 424.77 மில்லியன் பணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் உள்ளபடியாக ரூபா 36.33 செலவு செய்து அதாவது நிதி ஏற்பாட்டில் 8.6 சதவீதமான ஆகக்குறைந்த நிதிசார் செயல்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருந்ததுடன் 25 துணை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பௌதீக செயல் முன்னேற்றத்தினை அடைந்துகொள்ளல் பூச்சிய மட்டத்திலிருந்து 67 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (இ) | 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க கம்பனியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைப் பிரிவின் கீழ் 08 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 48.9 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவு ரூபா 6.7 மில்லியன் மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் 13.7 சதவீதம் ஆக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. 08 நிகழ்ச்சித்ததிட்டங்களில் கம்பனியின் 05 கடைகள் மற்றும் 03 பிராந்திய விற்பனை கடைகளை தோற்றுவித்தல், சில்லறை கடைகளுக்காக 300 அதிகுளிர்காப்பு பெட்டிகளை பகிர்ந்தளித்தல், யோகட் மற்றும் பட்டர்களை களஞ்சியப்படுத்துவதற்காக 3 குளிர்காப்பு அறைகளை நிர்மாணித்தல் ஆகிய 4 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காததனால் நிறுவனத்தின் பிரதான வருமான வழிகளை மேம்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. மிகுதி 4 செயற்பாடுகளில் புதிதாக 25 விநியோகத்தர்களில் 19 விநியோகதர்தர்களும் 5,000 கடைகளில் 1,484 கடைகளும் 50 பட்டய கடைகளில் 88 கடைகளும் 400 பெயர்ப் பலகைகளில் 160 பெயர்பலகைகளும் பகிர்ந்தளித்தல் இடம்பெற்றிருந்தது எனக் காட்டப்பட்டிருந்தும் அச்செயற்பாடுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>(i) பதிவுசெய்யப்பட்ட முகவர்கள் தொடர்பான விபரம் (பெயர், பதிவுசெய்த திகதி, விலாசம் வங்கிப் பிணை விபரம், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது நிலுவையான விற்பனைப் பணம்)<br><br>(ii) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட கடைகள் அமைந்துள்ள இடம், ஆரம்பிக்கப்பட்ட திகதி (தனியார் துறை மில்கோ) நிலுவையான விற்பனைப் பணங்கள் என்பன.<br><br>(iii) 2020, 2021 ஆம் ஆண்டுகளின் போது பட்டயக் கடைகள் அமைந்துள்ள இடங்கள், ஆரம்பிக்கப்பட்ட திகதி (தனியார் துறை மில்கோ) மற்றும் நிலுவையான விற்பனை பணம்.<br><br>(iv) பிராந்திய விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள இடம், ஆரம்பிக்கப்பட்ட திகதி, உரிமை (தனியார் துறை மில்கோ)<br>மற்றும் 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவையான விற்பனைப் பணம். | இவற்றில் பலவற்றின் செயல்முன்னேற்றத்திற்கான சான்று ஆவணங்கள் தனித்தனியாக தயாரிக்கப்படாததுடன் தேவைப்படுமாகவிருந்தால் தயாரித்து சமர்ப்பிக்கலாம். | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க கம்பனியின் செயற்பாடுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

(v) சில்லறைக் கடைகள் அமைந்துள்ள இடம், ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் உரிமை

(vi) 2021 ஆம் ஆண்டில் பெயர்ப்பலகைகள் யாருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் ஒரு வலயத்தின் பால் சேகரிக்கும் நிலையங்களை தலைமை அலுவலகத்துடன் இணைய வழிப்படுத்தல், மானிட திறன்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், விவசாயிகளுக்கு மத்தியில் போட்டித்தன்மையை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களில் எதுவும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இலக்கிடப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் தற்பொழுது இந்நிகழ்சிசித் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ள ஒவ்வொரு நிகழ்சிசத்திட்டங்களையும் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க 2021 ஆம் ஆண்டில் பதப்படுத்தாத பாலை சேகரித்தலை 96,551,000 லீற்றர்கள் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் ஆண்டில் உள்ளபடியான பால் சேகரித்தலின் அளவு 67,905,259 லிற்றர்களாக இருந்ததனால் செயல்முன்னேற்றம் 70 சதவீதமாக இருந்ததுடன் எதிர்பார்த்த பெறுபேறுகள் அடைந்துகொள்ளப்படவில்லை. | ஒட்டுமொத்தமாக நாட்டில் பால் உற்பத்தியில் குறைவு காணப்படுதல் மற்றும் போட்டி நிறுவனங்களால் தரத்தினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது பாலினை சேகரித்தததன் காரணமாக மில்கோ கம்பனியின் பால் சேகரிப்பில் குறைவு ஏற்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க எதிர்பார்த்த பெறுபேற்றினை அடைந்துகொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கொழும்பு, திகன, அம்பேவல, பொலன்னறுவை ஆகிய பால் தொழிற்சாலைகளின் தகவல் தொழில்நுட்ப பிரிவின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கான பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றங்கள் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லலை. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காணரமாக இலக்கிடப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் தற்பொழுது இந்நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றன. | திட்டமிட்ட செயற்பாடுகளுக்கான பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | கம்பனியால் 2020 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகளை முன்னறிதல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகளை முன்னறிதல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காததனால் நிறுவத்தின் செயற்பாட்டு செயல்முன்னேற்றம் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு முடியாதுள்ளது. | 2021 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகளை முன்னறிதல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தல் வேறுபட்ட முறையில் இடம்பெற்றதனால் செயற்பாடுகளை முன்னறிதல் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | கம்பனியால் செயற்பாடுகளை முன்னறிதல் அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2022 ஆம் ஆண்டிற்காக அடைந்து கொள்ள வேண்டிய பிரதான செயலாற்றல் குறிகாட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமானது வித்தியாசமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதனால் செயலாற்றல் குறிகாட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் குறிகாட்டி ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) | கம்பனியால் 2021 ஆண்டின் இறுதியில் வருடாந்தம் பதப்படுத்தாத பால் சேகரிக்கும் அளவினை 96 மில்லியன் லீற்றர் வரை அதிகரிக்கும் மற்றும் பால் கைத்தொழில் சார்ந்த விவசாயிகளின் வருடாந்த சாசரி வருமானத்தினை 12 சதவீதத்தால் அதிகரிக்கும் எதிர்பார்ப்பில் அது தொடர்பான பிரதான 14 செயலாற்றல் குறிக்காட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் மேலே குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை முன்னிட்டு அமுல்ப்படுத்தப்பட்ட பிரதான 03 செயலாற்றல் குறிகாட்டிகள் அதாவது பதப்படுத்தப்படாத பாலை சேகரிக்கும் அளவினை அதிகரித்தல், பால் தொழிற்சாலைக்காக புதிய தொழில்முயற்சியாளர்களை அறிமுகப்படுத்துதல், புதிய மெகா விவசாயிகளை உருவாக்குதல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பாக எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்துகொள்ளல் 35 சதவீதத்திலிருந்து 71 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இலக்கிடப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. | ஸ்தாபிக்கப்பட்ட செயலாறறல் குறிகாட்டிகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2015 பெப்ரவரி 11 ஆந் திகதிய அமைப/15/0205/631/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க படல்கம பால் தொழிற்சாலை செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் 2015 ஆம் ஆண்டின் போது யூரோ 63.9 மில்லியன் முதலீட்டில் நிர்மாண நடவடிக்கைகள் டென்மார்க் தனியார் நிர்மாண கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூரணப்படுத்த வேண்டிய நிர்மாண நடவடிக்கைகள் 2023 பெப்ரவரி வரையும் பூரணப்படுத்தப்படவில்லை. எனினும் 2021 பிரதான செயலாற்றல் குறிகாட்டியினைத் தயாரிக்கும் போது நிர்மாண நடவடிக்கை 100 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என காட்டப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது இலங்கை கடனை தீர்க்க முடியாமை பற்றி வெளியிட்டதோடு வெளிநாட்டவர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் பொதுத்திறைசேரியினால் நிறுத்திவைக்கப்பட்டது. 10 சதவீதத்திற்கு அண்மித்த அளவானவை இன்னும் பூர்த்திசெய்யப்பட வேண்டிய மட்டத்தில் உள்ளது. | பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளுக்கு இணங்க படல்கம பால் தொழிற்சாலையின் நிர்மாண நடவடிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பூரணப்படுத்துதல் வேண்டும். |
| (ஓ) | 2021 ஆம் ஆண்டளவில் ''ஹயிலன்ட்'' உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைப்பங்கினை 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரை எதிர்பார்ப்பதாகக் காட்டப்பட்டிருந்தும் இது தொடர்பான பிரதான செயலாற்றல் குறிகாட்டியாக விற்பனை அளவு ரூபா 17 பில்லியன் வரை அதிகரிக்கச் செய்தல், திரவப்பால் விற்பனையின் அளவினை 26 மில்லியன் வரை அதிகரித்தல் பாவனையாளர் முறைப்பாட்டின் எண்ணிக்கையை 100 வரை குறைத்தல் என்பனவாக செயலாற்றல் குறிகாட்டி ஸ்தாபிக்கப்பட்டிருந்து இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| | (i) எதிர்பார்த்த சந்தைப் பங்கினை அடைந்து கொள்வதற்காக எதிர்பார்த்த வெளியீடுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உள்ளீடான பாலின் அளவு நாட்டின் | பதில் வழங்கப்படவில்லை. | கம்பனியால் தனது உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான பாலினை |

| | | | |
|---|---|---|---|
| | ஒட்டுமொத்த பால் உற்பத்தியில் குறிப்படத்தக்க அளவானவற்றை கொள்வனவு செய்தலானது, மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாட்டு விடயமாக இருந்த போதிலும் கம்பனியால் தனது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தேவையான பாலை கொள்வனவு செய்தல் 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளின் போது நாட்டின் ஒட்டுமொத்த திரவப்பால் உற்பத்தியில் முறையே 14 சதவீதம் 13 சதவீதம் மற்றும் 9 சதவீதம் அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | கொள்வனவு செய்தலினை அதிகரித்தல் வேண்டும். |
| (ii) | 2020, 2021 , 2022 ஆகிய ஆண்டுகளின் போது உள்ள படியான திரவப்பால் விற்பனையின் அளவு முறையே 17,891,573 லீற்றர், 20,705,024 லீற்றர் மற்றும் 16,012,534 லிற்றர்களாகும். திரவப்பால் விற்பனை அளவு படிப்படியாக குறைவடைந்திருந்ததுடன் நிகழ்கால சந்தைப் போக்கு திரவப்பால் பாவனையாக இருந்த போதிலும் அது தொடர்பாக முகாமைத்துவம் கவ னம் செலுத்தி திரவப்பால் விற்பனையை அதிகரிப்பதற்காக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது மில்கோ கம்பனியால் சேகரிக்கப்பட்ட பாலின் அளவில் குறைவு ஏற்பட்டிருந்ததனால் திரவப் பால் உற்பத்தியும் குறித்த சில அளவினால் குறைவடைந்துள்ளது. | திரவப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஹயிட்லன்ட் உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான பாவனையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டின் போது 260 இனைவிடக் குறைப்பதற்கும் 2021 ஆம் ஆண்டில் 100 இனைவிடக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டில் 798 முறைப்பாடுகளும் 2021 ஆம் ஆண்டில் 598 முறைப்பாடுகளும் கிடைத்திருந்தது என கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கம்பனியின் உற்பத்தி சம்பந்தமாக பாவனையாளர் திருப்தியின்மை அதிகரித்துக் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் கிடைத்த முறைப்பாடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையினால் அது தொடர்பாக பகுப்பாய்வினை செய்யமுடியாதுள்ளது. | பாவனையாளர் முறைப்பாட்டினை குறைக்கும் குறிக்கோளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் போது பாவனையாளர் முறைப்பாட்டினை குறைக்கும் செயல்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டுள்ளது. | பாவனையாளர் முறைப்பாட்டு எண்ணிக்கையை குறைப்பதற்கும் அது தொடர்பான விபரங்களை கணக்காய்விற்குச் சமரப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | ஒட்டுமொத்தமாக 2021 ஆம் ஆண்டில் கம்பனியால் எதிர்பார்த்த 14 செயலாற்றல் குறிகாட்டிகளுக்கு மத்தியில் 7 குறிகாட்டிகள் அதாவது புதிய பால் விவசாயிகளை தொழிலுக்கு அறிமுகப்படுத்துதல், புதிய மெகா விவசாயிகளை தோற்றுவித்தல், திகன மற்றும் பொலன்னறுவை தொழிற்சாலைகளில் குளிர் அறைகளை நிர்ணயித்தல், திகன பொலன்னறுவை மற்றும் படல்கம தொழிற்சாலைகளுக்காக ISO 22000 நியமச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளல், யோகட் விற்பனை அளவினை 146 மில்லியன் கோப்பைகள் வரை அதிகரித்தல், ஹைலன்ட் உற்பத்திப் பொருட்களுடனான கடைகள் வியாபிப்பதனை அதிகரித்தல், ஊழியர் | பதில் வழங்கப்படவில்லை. | செயலாற்றல் குறிகாட்டிகளை ஸ்தாபிக்கும் போது மிகவும் நடைமுறைச் சாத்தியமான வகையில் ஸ்தாபித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைப்பாட்டினை குறைத்தல் ஆகிய குறிகாட்டிகளை அடைந்துகொள்ளலானது குறிப்படத்தக்க அளவில் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் செயலாற்றல் குறிகாட்டியை ஸ்தாபிக்கும் போது மிகவும் நடைமுறைச்சாத்தியமான வகையில் அடைந்து கொள்ளக்கூடியவாறு முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்து பொருத்தமான வகையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் போது குருனாகல், நுவரெலியா, அம்பாறை, ஊவா, ஆகிய பிராந்திய வலயங்களில் பதப்படுத்தப்படாத பாலினை சேகரிக்கும் செயல்முன்னேற்றம் 8, 16, 12 மற்றும் 0.1 சதவீதத்தால் குறைவடைதல் அவதானிக்கப்பட்டதுடன் 2021 ஆம் அண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் அனைத்து பிராந்திய வலயங்களிலும் பதப்படுத்தாத பால் சேகரித்தல் 53 சதவீதத்திலிருந்து 13 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | நாட்டில் பால் உற்பத்தி குறைவடைதல் மற்றும் அதிக போட்டியின் காரணமாக மில்கோ கம்பனியின் பால் சேகரிப்பில் குறைவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | உற்பத்தியை அதிகரிப்பதற்கு பதப்படுத்தாத பால் சேகரிப்பினை அதிகரித்தல் வேண்டும். |
| (க) | கம்பனியின் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான உற்பத்திகளின் செயல்முன்னேற்றத்திற்கு இணங்க 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் சீஸ், பட்டர், மற்றும் பால்மா உற்பத்திகளின் செயல்முன்னேற்றம் முறையே 3.8 சதவீதம் மற்றும் 15 சதவீத்தால் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் போது முழு ஆடைப்பால் மற்றும் தயிர் உற்பத்தியை தவிர்த்து ஏனைய உற்பத்திகளில் 64 சதவீத்திலிருந்து 15 சதவீதம் வரையான வீச்சில் தீவிர குறைவு இடம்பெற்றிருந்தது. | பால் சேகரிப்பின் குறைவு நேரொத்த உற்பத்தி செயல் முன்னேற்றத்திலும் குறைவு இடம்பெற்றுள்ளது. | பால் உற்பத்தியாளர்களின் வேண்டுதல்களுடன் உற்பத்தியையும் அதிகரித்தல் வேண்டும். |
| (கா) | பாலை எடுத்துச்செல்லும் பவுஸர் சம்பந்தமாகன பரீட்சிப்பின் பாது LL5724, LL 1351, LK1923, LJ4560, LN3801, LK1573, LI 3915, LN 2050 மற்றும் GR 1907 ஆகிய தனிப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து கம்பனியால் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட பவுஸர்கள் கம்பனியால் பொருத்தப்பட்ட தாங்கியுடன் உரிமையாளர்களினால் விற்கப்பட்டிருந்தன. இது உடன்படிக்கையை மீறுவதாக இருப்பதனால் அது சம்பந்தமாக பவுஸர் உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகன உரிமையாளர்களால் அவை ஏனைய தரப்பினர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தும் தாங்கிகளின் உரிமை மில்கோ கம்பனியிடம் உள்ளதுடன் அந்த வாகனங்களை கொள்வனவு செய்த புதிய தரப்பினர்களால் மில்கோ கம்பனியுடன் பாலை எடுத்துச் செல்லும் ஒப்பந்தம் பேணப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையை மீறுதல் சம்பந்தமாக உடன்படிக்கையின் 31 ஆம் பிரிவிற்கு இணங்க உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு இழப்பீடு அறவிடப்படுதல் வேண்டும். பவுஸர்களின் புதிய உரிமையாளர்களுடன் மீண்டும் உடன்படிக்கை செய்தல் வேண்டும். |
| (கி) | 2020 ஆம் ஆண்டின் போது மில்கோ நிறுவனத்தின் 04 தொழிற்சாலைகளுக்கும் பாலை எடுத்துச் செல்வதற்காக பெறுகை நடைமுறையினைப் பின்பற்றாது 71 பவுஸர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது 46,119,573 லீற்றர் பாலை எடுத்துச் செல்வதற்காக ரூபா 203,781,417 தொகை பவுஸர்களுக்காக மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு லீற்றர் பாலின் சராசரியாக பவுஸர் கிரயம் ரூபா 4.42 ஆக இருந்ததுடன் இந்த அதிக | ஒரு லீற்றர் போக்குவரத்து கிரயத்தை குறைக்கும் வகையில் எடுத்துச் செல்வதற்கான பயணத் தடவைகள் திட்டமிடப்படுவதுடன் பாலின் அலகுக் கிரயம் சம்பந்தமாக அடிக்கடி கவனம் செலுத்தப்படுகின்றது. | போக்குவரத்துச் செலவு பாலின் அலகுக் கிரயத்திற்கு தாக்கமளிப்பதனால் அதனை அறவீடு செய்வதற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் போட்டி விலைமனுக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | போக்குவரத்துச் செலவானது பாலின் அலகுக் கிரயம் அதிகரிப்பதற்கு தாக்கம் அளித்திருந்தும் அது தொடர்பாக உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | கோரி பவுஸர்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (i) | கம்பனியின் கொழும்பு தொழிற்சாலைக்காக 2011 சனவரி 20 ஆந் திகதி குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்த ரூபா 104,177,779 பெறுமதியான யோகட் கலக்கும் இயந்திரமானது உற்பத்திக் கோளாறினால் 12 ஆண்டுகள் காலமாக பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படாது வைக்கப்பட்டிருந்தது. | யோகட் கலக்கும் இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததுடன் அதன் பாகங்கள் ஏனைய தொழிற்சாலைகளின் இயந்திரங்களை திருத்தம் செய்கையில் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றது. | உற்பத்தி இயந்திரங்கள் உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | கம்பனியின் திகன தொழிற்சாலையில் காணப்படுகின்ற ரூபா 9,500,000 கிரயமான ஸ்டீரியலயிஸ்ட் பால் போத்தல் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் கொழும்பு பால் தொழிற்சாலையின் ரூபா 15,445,587 தொகையான ஐஸ்கிரீம் கோப்பைகள் தயாரிக்கும் இயந்திரம் முறையே 46 தசவீதம் மற்றும் 71 சதவிதம் ஆக குறைந்த மட்டத்தில் குறைவாக பயன்படுத்தும் நிலையில் காணப்பட்டது. | இயந்திரங்களை முழு இயலளவில் ஈடுபடுத்துவதற்காக தேவையான பால் இருப்பு போதியளவில் கிடைக்காததனால் இயந்திரங்களின் குறைப் பயன்பாடு இடம்பெற்றிருந்தது. | இயந்திரங்களின் முழு இயலளவினை ஈடுபடுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அம்பேவெல பால் தொழிற்சாலையின் பழைய மற்றும் புதிய உற்பத்திச்சாலைகளின் இயலளவு 9,300,000 லீற்றர்களாக இருந்த போதிலும் 2020, 2021 மற்றும் 2022 ஆகஸ்ட் வரை கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு இணங்க சராசரி இயலளவினைப் பயன்படுத்துதல் முறையே 3,052,858 லீற்றர், 2,675,819 லீற்றர் மற்றும் 1,690,560 லீற்றர்களாக இருந்ததுடன் அது மொத்த இயலளவில் முறையே 33 சதவீதம் 29 சதவீதம் மற்றும் 18 சதவீதம் என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | இயந்திரங்களின் முழுமையான இயலளவினை ஈடுபடுத்துவதற்குத் தேவையான பால் இருப்பு போதியளவு கிடைக்காமையால் இயந்திரங்களின் குறைப் பயன்பாடு இடம்பெற்றிருந்தது. | இயந்திரங்களின் முழுமையான இயலளவினையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | படல்கம பால் செயல்முறைப்படுத்தும் தொழிற்சாலையை ஸ்தாபிப்பதற்காக ரூபா 9,932,709,286 ஒப்பந்த பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1!,671,726,295 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள அம்பேவெல தொழிற்சாலைக்கு 2019 ஆம் | தற்பொழுது நாட்டின் பால் உற்பத்தியில் சில குறைவு காணப்பட்டிருந்தும் 2012 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் எங்களின் உற்பத்தி இயலளவினை மிகைத்து பால் இருப்பு கிடைத்ததன் காரணமாக குறிப்பிடத்தக்க அளவில் வெளியாக்க வேண்டி ஏற்பட்டது. மேற்கூறிய | இயந்திரங்களின் முழுமையான இயலளவினையும் ஈடுபடுத்துவதற்காக உடனடியாக திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது திரவப்பால் கிடைத்திருந்ததானது இயந்திரங்களின் இயலளவில் 25 சதவீதத்திற்கு போதுமான திரவப்பால் படல்கம தொழிற்சாலையின் நிர்மாண வேலை பூர்த்தியடைந்ததன் பின்னர் உரிய தொழிற்சாலையின் இயந்திரங்களின் இயளலவிற்க இணங்க ஒரு நாளைக்கு கம்பனிக்கு திரவப்பால் 400,000 லீற்றர் தேவைப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது ஏனைய செயற்படும் 04 தொழிற்சாலைகளுக்காகவும் நிறுவனத்தினால் சேகரிக்கக்கூடிய நாளாந்த திரவப்பாலின் அளவு 200,000 லீற்றர்களாக இருந்ததனால் இந்த இயந்திரத்தின் முழுமையான இயலளவினையும் பயன்படுத்துவதற்கான இயலுமை இல்லை என அவதானிக்கப்பட்டது. | விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பால் உற்பத்தியில் ஈடுபடுகின்ற அரசாங்க நிறுவனமாக விவசாயிகளின் பால் விளைச்சலினை வெளியில் வீசாது உற்பத்தி நடைமுறையில் ஈடுபடுத்துவதற்கு முடியுமான வகையில் உற்பத்தி இயளலவினை பேணவேண்டி ஏற்பட்டது. | |
| (v) | பொலன்னறுவை பால் தொழிற்சாலை அமைந்துள்ள 12 ஏக்கர் காணியும் இன்னும் 37 ஏக்கர்களாக 2 காணிகள் கம்பனியிடம் உள்ளது. எனினும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையும் இந்த இரண்டு காணிகளுக்குமுரிய உறுதியும் திட்ட வரைபடமும் கம்பனியிடம் இல்லாதிருந்ததுடன் 37 ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம், சமூக மண்டபம், பால்சாலை மற்றும் மாட்டுப் பண்ணை என்பன தற்பொழுது பயன்படுத்தப்படுவதில்லை. அக்காணியில் 15 ஏக்கரிற்கு மேற்பட்ட காணி எந்த பயிர்ச்செய்கைக்கோ அல்லது நிர்மாணத்திற்கோ பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது என 2019 திசெம்பர் 31 இல் மேற்கொண்ட வெளிக்கள பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டது. | காணியை பொறுப்பேற்பதற்குரிய சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விளைவற்றுக் காணப்படுகின்ற காணியை பயன்படுத்துதல் வேண்டும். காணிகளின் சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மில்கோ நிறுவனத்தின் கீழ் உள்ள பால் சேகரிக்கும் நிலையங்களிலிருந்து மில்கோ தொழிற்சாலைக்கு பாலை எடுத்துச்செல்லும் போது மில்கோ நிறுவனத்தின் பால் தாங்கி தனியார் பவுஸர்களின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது 71 தனியார் பவுஸர்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களினால் மீளாய்வாண்டின் போது 46,119,573 லீற்றர் பால் எடுத்துச் செல்வதற்காக ரூபா 203,781,417 செலுத்தப்பட்டிருந்தது. இந்த பவுஸர்கள் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க போட்டி விலைமனுக்கள் கோரப்படாது நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது எனவும் அந்த வாகனங்களில் 45 வாகனங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ககாலமாக கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டத. | அதுவரை போட்டி விலைமனுக்கள் கோரி பவுஸர்களின் போக்குவரத்து ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தும் விலைகள் மிகவும் அதிகமானது எனத் தோன்றியதனால் விலைச்சூத்திரத்திற்கு இணங்க உச்சவிலையை தீர்மானிப்பதற்கு அப்போதிருந்த முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டது. மேற்கூறிய விலைச் சூத்திரத்திற்கு இணங்க விலைகளில் குறிப்பிடத்தக்க அளவு குறைவு ஏற்பட்டிருந்ததுடன் அந்த முறைமை தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக்கு இணங்க பாலை எடுத்துச் செல்வதற்கு பவுஸர்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.6 முறைப்படியாக பொறுப்பேற்க்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1980 மார்ச் 10 ஆந் திகதி நில அளவை செய்யப்பட்ட 4754 ஆம் இலக்க திட்ட வரைபடத்திற்கு இணங்க அம்பேவெல தொழிற்சாலை காணப்படுகின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி 40 ஏக்கர் 01 ரூட் 36 பேச்சஸ்களாக இருந்ததுடன் அதில் கம்பனியின் ரூபா 5,548 மில்லியன் பெறுமதியான நிர்மாணங்களும் பொருத்திகளும் உள்ள போதிலும் இக்காணியின் உரிமையை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கம்பனியால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை பொறுப்பேற்பதற்குரிய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இக்காணியின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியால் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் பயன்படுத்துவதற்காக கமத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான 02 ஜீப்கபளும் 02 லொறிகளும் பயன்படுத்தப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரை உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனத்தை பொறுப்பேற்காது ஓடுவதற்காக ஈடுபடுத்துவதற்கு அனுமதி கிடைத்தள்ளதனால் ஒடுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | வாகன உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8 மனிதவளங்கள் முகாமைத்துவம்

**கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்**

கம்பனியின் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் 2020 | 2020 உள்ளபடியான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 18 | 19 | - | 01 |
| மூன்றாம் மட்டம் | 202 | 175 | 27 | - |
| இரண்டாம் மட்டம் | 873 | 425 | 448 | - |
| ஆரம்ப மட்டம் | 485 | 762 | - | 277 |
| | ……… | ……. | …….. | ………. |
| | 1,578 | 475 | 278 | 1,410 |

| ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | 2021 | | |
|---|---|---|---|---|
| | 2021 | உள்ளபடியான | வெற்றிடம் | மிகை |
| சிரேஷ்ட மட்டம் | 80 | 67 | 13 | - |
| மூன்றாம் மட்டம் | 133 | 139 | - | - |
| இரண்டாம் மட்டம் | 529 | 447 | 82 | 06 |
| ஆரம்ப மட்டம் | 836 | 757 | 79 | - |
| | ......... | ....... | ........ | ....... |
| | 1,381 | 174 | 174 | 06 |

| ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | 2022 | | |
|---|---|---|---|---|
| | 2022 | உள்ளபடியான | வெற்றிடம் | மிகை |
| சிரேஷ்ட மட்டம் | 80 | 63 | 17 | - |
| மூன்றாம் மட்டம் | 133 | 135 | - | 02 |
| இரண்டாம் மட்டம் | 529 | 432 | 97 | - |
| ஆரம்ப மட்டம் | 836 | 725 | 111 | - |
| | ......... | ....... | ........ | ....... |
| | 1,381 | 1355 | 225 | 02 |

| | | | |
|---|---|---|---|
| (i) | 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்ப மட்டத்தில் அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையை மிகைத்து 277 ஊழியர்கள் இருந்த போதிலும் ஆரம்ப மட்டத்தில் 2020 ஆம் ஆண்டிற்காக பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பதவிக்காக 06 பதில் கடமை பார்த்தல் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | ஒட்டுமொத்தமாக சில பதவித் தொகுதிகளில் மிகைகள் காணப்பட்டிருந்தும் பதவிரீதியாக எடுத்துக்கொள்கையில் வெற்றிடங்கள் உருவாகியுள்ளன. அதன் போது மேற்கூறிய நிரந்தர பதவி வெற்றிடங்களை பூரணப்படுத்துதல் அவசியமானதாகும். | தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். மிகை ஊழியர்களை வைத்துக்கொள்ளாதிருத்தல் வேண்டும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்ப மட்டத்தில் 79 ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் ஆரம்ப மட்டத்திலுள்ள பதவியான 8 வேலைத்தள செயற்பாட்டாளர் பதவிகள் மற்றும் நீர் பம்பிகளுக்காக பதில் கடமை பாரத்தல் ஆகிய மொத்தமாக 09 பதவிகளுக்காக பதில்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபா 87,160 பதில் கடமை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சில பதவித் தொகுதிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் அச்சந்தர்ப்பம் வரை அத்தியவசியமாக பூரணப்படுத்தப்பட வேண்டிய வெற்றிடங்களை மாத்திரம் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். மிகை ஊழியர்களை வைத்துக்கொள்ளாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மில்கோ நிறுவனத்தின் உதவி முகாமையாளர் பதவிக்காக வெளி விண்ணப்பதாரர்களுக்கான ஆகக் குறைந்த கல்வித் தகமைகளாக உரிய வியடம் சம்பந்தமான பட்டப்படிப்பும் உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்குறைந்த கல்வித் தகமையாக உரிய விடயம் சம்பந்தமான டிப்ளோமாவுடன் உரிய சேவைக் காலம் காணப்படவேண்டுமென நிறுவனத்தின் ஒவ்வொரு பதவிக்குமாக ஆட்சேர்ப்பு நடைமுறையில் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த கல்வித் தகமையினை நிறைவேற்றாத விண்ணப்பதாரர்கள் உதவி முகாமையாளராக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த 07 சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | அண்மைக்காலத்தில் அவ்வாறான ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருக்காததுடன் கடந்தகாலத்தில் அவ்வாறானவை இடம்பெற்றுள்ளது. | தகமை இல்லாத விண்ணப்பதாரர்களை சேர்த்துக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இடம்பெற்றுள்ள பிழைகளை சரிசெய்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 திட்டமிடல்

#### (அ) தொழில்முயற்சி திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பால் சேகரிக்கும் வலையமைப்பினை விஸ்தரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2020 ஆண்டிற்காகத் தயாரித்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத விவசாய முகாமைத்துவ சங்கங்களை தோற்றுவித்தல், வாயு சீராக்கும் நிலையத்தை ஸ்தாபித்தல் மற்றும் ஒரு நாளைக்கு 100 லீற்றர்களை சேகரிக்கும் நிலையத்தை ஸ்தாபித்தல் ஆகிய இலக்குகள் தொழில்முயற்சி திட்டத்திலுள்ள இலக்குகளுடன் வேறுபட்டுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது 2018 - 2020 தொழில்முயற்சி திட்டமானது குறிப்பிடத்தக்க அளவு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தும் அதுவரை வியாபாரத் துறையில் காணப்பட்ட மாற்றங்கள் மற்றும் போட்டிச் சூழ்நிலையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இலக்குகள் இடப்பட்டுள்ளன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது தொழில்முயற்சித் திட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 5(ii)ஆம் பிரிவின் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வருடாந்த பாதீடு, மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், வருடாந்த பெறுகைத் திட்டம், கடனை | மில்கோ கம்பனியின் செயல் நடவடிக்கைத் திட்டம் தனியாகவும் காசுப்பாய்ச்சல் கூற்று, மூலதனச் செலவுத் திட்டம் மீண்டுவரும் செலவுத் திட்டம் ஆகிய ஆவணங்கள் தனியாகவும் தயாரித்தல் இடம்பெற்றுள்ளது. அவ்வாறே மேற்கூறிய திட்டங்கள் கணக்காய்ளவார் தலைமை அதிபதி திணைக்களத்தினால் வேண்டிக் கொண்டதன் பின்னர் வழங்குதல் இடம்பெற்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

மீளச் செலுத்தும் திட்டம் ஆகிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு பிரிவின் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக மாத்திரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.2 கணக்காய்வு குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு குழு நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டில் தொடக்க 02 காலாண்டுகளையும் உள்ளடக்கும் வகையில் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை முறையாக நடாத்துவதற்கான இயலுமை இல்லாதததுடன் 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்களை நியமித்தல் தாமதமடைந்துள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க ஒவ்வொரு காலாண்டிற்கு ஒரு தடவை கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். |

4.3. **பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளின் போது பணிப்பாளர்கள் சபையினால் 12 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் இந்த ஆண்டுகளில் முறையே 06 கூட்டங்கள் மற்றும் 05 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கொரோனா தொற்றுநோய் நிலைமை நாட்டில் காணப்பட்டதனால் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை முறையாக நடத்துவதற்கான இயலுமை காணப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க ஒரு மாதத்திற்கு ஒரு தடவை பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்படுதல் வேண்டும். |

### 4.4. பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான பாதீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான இறுதிப் பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை சமர்ப்பிக்கும் இயலுமை காணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பானர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு மேற்படாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 4.5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2023 ஆம் ஆண்டில் தமது அமைப்பிற்குரிய அனைத்து நாடுகளும், பொருளாதார முன்னேற்றத்தினையும் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு திட்டத்தினையும் அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் கம்பனியால் அதற்கு பொருந்தும் வகையில் எதிர்பார்த்த குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்காததுடன் சரியான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்யும் நடைமுறை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மில்கோ நிறுவனத்தின் கடமையானது பால் விவசாயிகளின் பொருளாதார நிலைமையை முன்னேற்றுதல் மற்றும் பொதுமக்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்குவதுமாகும். அதற்கிணங்க எங்கள் கம்பனி நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான அனைத்து செயற்பாடுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களுக்கு இணங்க எதிர்பார்த்த குறிக்கோள்கள் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை இனங்கண்டு அமுல்ப்படுத்துதல் வேண்டும். |